**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 30.09.2015

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 24°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் கடந்த வாரத்தில் பல இடங்களில் மிதமான மழை முதல் கனமான மழை பொழிந்துள்ளது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (30.09.2015 முதல் 04.10.2015)**

**1. மேற்கு மண்டலம்**

✓ மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 82-86 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 78-82 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

✓ வானம் அதிக மேகமூட்டத்துடனும், அதிக ஈரப்பதத்துடனும் காணப்படுவதால் மஞ்சளில் நுண்ணூட்டசத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இலை வழி உரமாக ஒரு ஏக்கருக்கு 150 கிராம் பெரஸ் சல்பேட், ஜிங்க் சல்பேட், போராக்ஸ் மற்றும் யூரியாவை 100 லிட்டர் நீரில் கலந்து 25 நாட்கள் இடைவெளியில் மழை இல்லாத நாட்களில் இருமுறை தெளிக்கவும்.

✓ தொடர்ந்து மழை பெய்வதால் மஞ்சளில் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவையை செடிகளின் வேரில் ஊற்றவும். மேலும் போதிய வடிகால் வசதியை ஏற்படுத்தவும்.

✓ காற்றின் வேகம் மற்றும் ஈரப்பதம் அதிகமாகவும், மேலும் தொடர்ந்து மழை பெய்வதாலும் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 200 கிராம் கார்பன்டாசிம் அல்லது 400 கிராம் மேங்கோசெப் மருந்தினை தெளிக்கவும்.

✓ கால்நடை குடில்களில் தண்ணீர் தேங்காமல் வடிகால் வசதி செய்யவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 52 முதல் 78 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள குறுவை நெல்லினை தாக்க பாதுகாப்புடன் அறுவடை செய்யவும்.
- ✓ தாளடி பருவத்திற்கு ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49, வெள்ளை பொன்னி, திருச்சி 3, மற்றும் டிகேஎம் 13 இரகங்களும் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.
- ✓ சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 30 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

**3. தெற்கு மண்டலம் - 1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $25^0$செ முதல் $26^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 54 முதல் 86 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 7 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மானாவாரி பயிர்களுக்கு களைக்கொல்லி இடும்போது சரியான அளவு களைக்கொல்லியை சரியான சமயத்தில் இடவும். சோளம், கம்பு மற்றும் மக்காச்சோளத்திற்கு ஒரு எக்டருக்கு அட்ரசின் 500 கிராம் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம்), தக்காளி, வெண்டை மற்றும் மிளகாய்க்கு ஒரு எக்டருக்கு புளுகுளோரலின் 2.2 லிட்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4.4 மி.லி.), பயறுவகைகளுக்கு ஒரு எக்டருக்கு பென்டிமெத்தலின் 2 லிட்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4 மி.லி.) மற்றும் பருத்திக்கு ஒரு எக்டருக்கு பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 6.6 மி.லி.) என்ற அளவில் எக்டருக்கு 500 லிட்டர் தண்ணீரை பயன்படுத்தி தெளிக்கவும். அல்லது ஒரு எக்டருக்கு சிபாரிசு செய்யப்பட்ட களைக்கொலிலியை 50 கிலோ மணலுடன் கலந்து பயிர் விதைத்த மூன்றாவது நாள் மாலை வேளையில் மேலோட்டமாக தூவவும்.

**4. தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் இலாசான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 32°செ முதல் 36°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 76 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 கி.மீ முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மற்றும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொறுத்து இறவை பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யலாம்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையைப் பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக உழவு செய்யலாம்.
- ✓ வரும் வானிலையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளம் நடுவதற்கு ஏற்றவாறு நிலங்களை தயார் செய்யவும்.
- ✓ விவசாயிகள் விளை நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மழை நீரை சேமித்து வைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்படுகின்றனர். ஏனெனில் இந்த மழை நீரை பயன்படுத்தி வறட்சி காலங்களில் பயிர்களுக்கு பாசனம் செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.
- ✓ பின் சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ நெல் நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ சல்பேட், 15 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாசியம் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். நடவிற்கு முன் ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட்டு நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனோபர் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்ககூடும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 82 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தொடர் மழை எதிர்பார்க்கப்படுவதால் சாகுபடி செய்யப்பட்ட காய்கறி மற்றும் உருளை கிழங்கு வயல்களில் வடிகால் வசதி செய்ய வேண்டும்.

**6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 78 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 4 கி.மீ முதல் 6 வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ பருவமழை காலம் துவங்குவதற்கு சாதகமான சூழ்நிலையாகும், இதுவரை பெய்த நல்ல மழை காரணமாகவும், அடுத்து வரும் நாட்களில் நிலவும் மேகமூட்டம் காரணமாகவும் வெப்ப அளவுகள் 34,0°செ,(93,2°பா) மற்றும் 35,0°செ,(95,0°பா)என்ற அளவில் இருக்கும் என்பதால், இனிவரும் நாட்களில் கோழிகளில் வெப்ப அயற்சி குறையும் .
- ✓ தற்போது கிடைக்கும் மழையினைப் பயன்படுத்த. புரட்டாசிப் பட்டத்தில் பாசிப்பயறு சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் குறுகியகால இரகங்களான விரிஞ்சிபுரம்,1. மற்றும் வம்பன்,2 போன்ற இரகங்களைத் தேர்வு செய்து விதைப்பு செய்தால் அதிக மகசூல் பெறலாம். ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை தேவைப்படுகிறது. ஒருகிலோ விதைக்கு 2 கிராம் திரம் அல்லது 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்யவும்.

**7. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 66 முதல் 82 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 4 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழைக்காலம் துவங்குவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்க வேண்டும்.
- ✓ வரும் மழையை பயன்படுத்தி மானாவாரியில் நிலம் தயார் செய்து நிலக்கடலை விதைப்பு செய்யலாம்.

**8.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை $31^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $23\text{-}24^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 82 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ காய்க்கும் பருவத்திலுள்ள அன்னாசியில் மழை நீர் தேங்காமல் வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் **32.0** மி.மீ அளவு மழை பெய்ய வாயப்புள்ளதால் தென்னை, கோ கோ, மிளகில் உரமிடலாம்.
- ✓ புதுத்துளிர் மற்றும் பூக்கும் பருவத்திலுள்ள இரப்பரில் பாலித்தீன் ரைன்கார்ட் -ஐ மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களிலும் பால் வெட்டலாம்.
- ✓ பூக்கும் தருணத்திலுள்ள கிராம்பில் மழைநீரை சேகரிக்க ஏதுவாக பாத்திகள் அமைக்கலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**கோவை - 3**